

நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நகர ஒன்றிய பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் சசிகுமார் வரவேற்றார்.மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் கே. இ. பிரகாஷ் எம்.பி., கழகத் தேர்தல் பணிக்குழு செயலாளர் தலைமை அரசு கொறடா கா. ராமச்சந்திரன், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு. முபாரக், பாபு, நாகராஜ், வினோத், பத்மநாபன், நௌபுல், முரளிதரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக வலைதள பயிற்சியை சூரிய கிருஷ்ணமூர்த்தி மற்றும் இளமாறன் ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் போஜன், ரவிக்குமார், இளங்கோவன், காசிலிங்கம், அன்வர் கான், பரமேஷ் குமார், வாசிம் ராஜா, ஜார்ஜ், இராமசாமி, சேகரன், பரமசிவன், காமராஜ், பீமன், சிவனந்த ராஜா, தொரை, பில்லன் சதக்கத்துல்லா, சுப்பிரமணி, சுந்தர்ராஜ், நடராஜன், முத்து, சின்னவர் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



சேலம் சுகவனேஸ்வரர் சுவாமி திருக்கோவில் தேரோட்டத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (09.06.2025) தொடங்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி.எம்.சாரதாதேவி, அறங்காவல்குழுத் தலைவர் வள்ளிப்பா உள்ளிட்டோர் உள்ளனர்.

### கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# திருப்பூர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. இல்ல மணவிழா வரவேற்பு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!



திருப்பூர், ஜூன் 11-

முத்தமிழறிஞர், செம்மொழி நாயகர், கலைஞர், பல்லடம் வட்டம், ஊஞ்சப்பாளையம் கருப்புசாமி கவுண்டர் க.முத்தம்மாள் ஆகியோரின் நல்லாசியுடன் திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற க.செல்வராஜ் - செ.சாந்தாமணி ஆகியோரது மகள், திருப்பூர் வடக்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் செ.திலகராஜ் சகோதரி செ.செந்தமிழ் B.B.A., MIB., கோவை, கணபதி, அண்ணாநகர் C.P.சாமிநாதன்-சா.தமிழ்செல்வி ஆகியோரது மகன் சா.யோகேஸ் கண்ணா B.E., M.B.A திருமண வரவேற்பு விழா திருவள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி மாதம் 28ம் நாள் இன்று (11.06.2025) புதன் கிழமை காலை 10.00 மணிக்கு மேல் மதியம் 03.00 மணிக்குள் கோவை சேலம் தேசிய நெடுஞ்சாலை, செங்கப்பள்ளி சொர்ண மஹாலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இன்னாள் முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

# கோட்டப்பாளையம் முகவர் இல்ல மணவிழா!

## கழகத்தினர் உறவினர்கள் வாழ்த்து!



திருச்சி, ஜூன் 11-

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் கோட்டப்பாளையம் முரசொலி முகவர் டி.சந்திரசேகரன் - சி.பூங்கோதை இணையரின் மகள் டாக்டர் சி. விவேகா என்பவருக்கும் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கொண்டங்காட்டூர் ஆர். வெங்கடாசலம் - பட்டு (எ) கவிதா இணையரின் மகன் பொறியாளர் வி. சரவணகுமார் என்பவருக்கும் திருமணம் 6.6.2025 வெள்ளிக்கிழமை காலை நாமக்கல் சேந்தமங்கலம் ரோடு சக்தி மயில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

திருமணத்தில் உறவினர்கள் கழகத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

முன்னதாக திருமண வரவேற்பு 5.6.2025 வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

# ஈரோடு வடக்கு மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா!

## மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!



ஈரோடு, ஜூன் 11-

ஈரோடு வடக்கு மாவட்ட அலுவலக திறப்பு விழா நாளை (12.6.2025 -வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு கோபிசெட்டிபாளையம், ஈரோடு கோபி முதன்மை சாலையில் கரட்டூர் ஆர்ச் அருகில் மாநிலங்களவை உறுப்பினரும், கழக செயலாளர் பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராசு, வீட்டு வசதி, மதுவிலக்கு, மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாஜலம் ஆகியோர் கழக கொடியேற்றி, அலுவலகத்தை திறந்து வைக்க உள்ளார்கள்.

எனவே மாநில மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் தலைமையில் ஒசூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், முன்னிலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கழக உறுப்பினர் சேர்க்கை, கழக ஆக்கப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.இக்கூட்டம் மாவட்ட துணை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செயலாளர் பி.முருகன்,, மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா,, மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, மாவட்ட பொருளாளர் சுகுமாரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி, எல்லோராமணி, கிரிஷ், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், மாநில அணிகளின் துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் சீனிவாசலு ரெட்டி, திவாகர், ரகுநாத், நாகேஷ், கஜேந்திர மூர்த்தி, பாக்யராஜ், கருணாகரன், ராஜா, ஸ்ரீதர், சின்ராஜ், பேரூர் செயலாளர் சீனிவாசன், பகுதி செயலாளரும் துணை மேயருமான ஆனந்தய்யா, வடக்கு பகுதி செயலாளர் வெங்கடேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சுமன், கண்ணன், ஆனந்தப்பா, முனிராஜ், வெங்கடசாமி, மணிவண்ணன், மாணிக்கவாசகம், ராமமூர்த்தி, சிவசங்கர், சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





### மொடக்குறிச்சி தொகுதி

- வடுகப்பட்டி பேரூராட்சியில் ரூ.11லட்சம் செலவில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல்.
- சிவகிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் மேசை, நாற்காலி வாங்குதல்.
- லக்காபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் மேசை, நாற்காலி வாங்குதல்.
- வெள்ளோடு அரசு மேல்நலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் மேசை, நாற்காலி வாங்குதல்.
- அவல்பூந்துறை அரசு மேல்நலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் மேசை, நாற்காலி வாங்குதல்.
- அரச்சலூர் அரசு மேல்நலைப்பள்ளிக்கு 8 லட்சத்து 75 அயிரம் மதிப்பில் மேசை, நாற்காலி வாங்குதல்.
- சிவகிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் ஆய்வக உபகரணங்கள் வாங்குதல்.
- லக்காபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் ஆய்வக உபகரணங்கள் வாங்குதல்.
- வெள்ளோடு அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் ஆய்வக உபகரணங்கள் வாங்குதல்.
- அவல்பூந்துறை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் ஆய்வக உபகரணங்கள் வாங்குதல்.
- அரச்சலூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் ஆய்வக உபகரணங்கள் வாங்குதல்.
- மொடக்குறிச்சி பேரூராட்சி 11வது வார்டு வாரச்சந்தை ஹைமாஸ் 6 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- மொடக்குறிச்சி பேரூராட்சி 13வது வார்டு ஆலங்காட்டு வலசு ஹைமாஸ் 6 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- கொடுமுடி பேரூராட்சியில் ஹைமாஸ் 6 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- வெள்ளோட்டம்பரப்பு பேரூராட்சியில் ஹைமாஸ் 6 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- சிவகிரி பேரூராட்சி 16-வது வார்டில் 14 லட்சம் மதிப்பில் நியாயவிலைக்கடை அமைத்தல்.
- கொடுமுடி கருவேலம்பாளையம் பள்ளியில் சத்துணவுக்கூடம் 6 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பில் அமைத்தல்.
- கொடுமுடி - சிவகிரி வார்டு எண்.9-ல் பொது நூலகம் 15 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- மொடக்குறிச்சி அரசு பொது நூலகங்களுக்கு புத்தகம் 8 லட்சம் மதிப்பில் வாங்குதல்.
- மொடக்குறிச்சி 11-வது வார்டில் 20 லட்சம் மதிப்பில் தார்சாலை அமைத்தல்.
- சிவகிரி பேரூராட்சி 1-வது வார்டில் மின் விளக்குகள் 6 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- வடுகப்பட்டி பேரூராட்சி உத்திரங்காட்டுபுதூரில் 6 லட்சம் மதிப்பில் ஹைமாஸ் அமைத்தல்.
- வெங்கம்பூர் பேரூராட்சியில் 30 லட்சம் மதிப்பில் சமூதாயக்கூடம் அமைத்தல்.
- மொடக்குறிச்சி காவல்நிலையம் எல்லையில் 16 லட்சத்து 57 ஆயிரத்து 600 மதிப்பில் கண்காணிப்பு கேமிரா அமைத்தல்

### ஈரோடு கிழக்கு தொகுதி

- ஈரோடு மாநகராட்சி 24வது வார்டு முத்துமாரியம்மன் கோவில் வீதியில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்.
- ஈரோடு மாநகராட்சி 24வது வார்டு கிருஷ்ணம்பாளையம் காலனியில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்.
- ஈரோடு மாநகராட்சி 24வது வார்டு பம்பிங் ஸ்டேஷன் சாலை3-ல் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்.
- ஈரோடு கிழக்கு அரசு ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு 6 லட்சம் மதிப்பில் நூலகங்களுக்கு புத்தகம் வாங்குதல்.
- ஈரோடு மாநகராட்சி 24-வது வார்டு திருநகர் காலனி பூங்காவில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- வ.உ.சி. மைதானத்தில் 10 லட்சம் மதிப்பில் மின்விளக்குகள் அமைத்தல்
- திருநகர் காலனி நடுநிலைப்பள்ளிக்கு 1 லட்சத்து 18 ஆயிரம் மதிப்பில் மேசைகள் மற்றும் சமையல் பொருட்கள் வாங்குதல்.

### ஈரோடு மேற்கு தொகுதி

- திண்டல் 30-வது வார்டில் 18 லட்சம் மதிப்பில் கழிவுநீர் வடிகால் வசதி அமைத்தல்.
- திண்டல் 30-வது வார்டில் 18 லட்சம் மதிப்பில் கழிவுநீர் வடிகால் வசதி அமைத்தல்.
- ஈரோடு மாநகராட்சி 33-வது வார்டு சூரம்பட்டியில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்.
- ஈரோடு மாநகராட்சி 33-வது வார்டு சூரம்பட்டியில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- ஈரோடு மாநகராட்சி 9-வது வார்டு பெரியசேமூரில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- ஈரோடு மாநகராட்சி 9-வது வார்டு எஸ்.எஸ்.பி. நகரில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- ஈரோடு மாநகராட்சி 56-வது வார்டு சேனாதிபாளையத்தில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- ஈரோடு மாநகராட்சி 56-வது வார்டு அன்னை சத்யா நகரில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- சித்தோடு பேரூராட்சி GH-ல் 6 லட்சம் மதிப்பில் ஹைமாஸ் அமைத்தல்.
- பிச்சாண்டாம்பாளையம் ஊராட்சியில் 15 லட்சம் மதிப்பில் நியாய விலைக்கடை அமைத்தல்
- ஈரோடு மாநகராட்சி 49-வது வார்டு சாமுண்டி நகரில் 15 லட்சம் மதிப்பில் நியாய விலைக்கடை அமைத்தல்
- ஈரோடு மேற்கு அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளி நூலகங்களுக்கு 8 லட்சம் மதிப்பில் புத்தகம் வழங்குதல்.
- சிவகிரி பேரூராட்சி 1-வது வார்டில் மின் விளக்குகள் 6 லட்சம் மதிப்பில் அமைத்தல்.
- வடுகப்பட்டி பேரூராட்சி உத்திரங்காட்டுபுதூரில் 6 லட்சம் மதிப்பில் ஹைமாஸ் அமைத்தல்.
- வெங்கம்பூர் பேரூராட்சியில் 30 லட்சம் மதிப்பில் சமூதாயக்கூடம் அமைத்தல்.

### காங்கேயம் தொகுதி

- சிவன்மலையில் 25 லட்சம் மதிப்பில் சிறுவிளையாட்டு அரங்கம் அமைத்தல்.
- வெள்ளக்கோவில் வேலாம்பாளையம் மங்கலப்பட்டி பகுதியில் 5 லட்சத்து 45 ஆயிரம் செலவில் புதிய ஆழ்துளை கிணறு 5 hp மின்மோட்டார் பெருத்தி குடிநீர் நீட்டிப்பு செய்தல்
- வெள்ளக்கோவில் கந்தசாமிபாளையம் பகுதியில்7 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் 10000 லிட்டர் நிலமட்டத் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல்.
- வெள்ளக்கோவில் வேலாம்பாளையம் பொன்னாபுரம் பகுதியில் 3 லட்சத்து 39 ஆயிரம் செலவில் புதிய ஆழ்துளை கிணறு 5 hp மின்மோட்டார் பெருத்தி குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல்.
- முத்தூர் மோளக்கவுண்டன்புதூரில் 1 லட்சத்து 12 ஆயிரம் மதிப்பில் 5000 லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் நீட்டிப்பு செய்தல்.
- பொத்தியபாளையம்-ராசாபாளையம் பொதுகுடியிருப்பு பகுதியில் 6 லட்சம் மதிப்பில் புதிய ஆழ்துளை கிணறு 5hp மின்மோட்டார் பொருத்தி 5000லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல்.
- பாப்பினி காமாட்சி வலசு பகுதியில் 2 லட்சம் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல்.
- குண்டடம் வடசின்னாரிபாளையம், வேலாயுதம்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் 4 லட்சத்து 70 அயிரம் மதிப்பில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல்.
- வெள்ளக்கோவில் வேலாம்பாளையம் காங்கேயம்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் 5 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து 5 hp மின்மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல்.
- காங்கேயம் வார்டு எண்.11 பழையக்கோட்டை சாலை பாரத் நகர் பிரதான வீதி முதல் கலீல் வீடு வரை 19லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் வடிகால் கட்டும்பணி அமைத்தல்.

### தாராபுரம் தொகுதி

- குளத்துப்பாளையம் பேரூராட்சியில் 17 லட்சம் மதிப்பில் நியாயவிலைக்கடை அமைத்தல்
- மூலனூர் காணர்பாளையம் பிஎஸ்என்எல் அலுவலகத்தில் 4 லட்சம் மதிப்பில் மினிமாஸ் அமைத்தல்
- தாராபுரம் வார்டு எண்.6 மூவேந்தர் நகரில் 10 லட்சம் மதிப்பில் நியாயவிலைக்கடை அமைத்தல்

### குமாரபாளையம் தொகுதி

- குமாரபாளையம் 4-வது வார்டு அங்காளம்மன் கோவில் பின் படித்துறையில் 20 லட்சம் மதிப்பில் படித்துறை அமைத்தல்.
- பல்லக்காபாளையம் ஊராட்சியில் 9 லட்சத்து 82 ஆயிரம் மதிப்பில் எல்இடி விளக்குகள் அமைத்தல்.

6 தொகுதிகளில் மொத்த தொகை
ரூ.4,90,77,600/-

கே.இ.பிரகாஷ், B.A., M.P., துணைச்செயலாளர்- தி.மு.க. இளைஞர் அணி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர்.